**தலைப்பு 207 - தொல்பொருளியல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 207 - தொல்பொருளியல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,001.00 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 910.94 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான ரூபா 90.06 மில்லியன் அதாவது 9 சதவீத நிதி ஏற்பாடு சேமிப்புக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 849.50 | 824.88 | 24.62 | 290. |
| மூலதனம் | 151.50 | 86.06 | 65.44 | 43.19 |
| மொத்தம் | 1,001.00 | 910.94 | 90.06 | 9.00 |

**2.2. முற்பணக் கணக்குகள்**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 20701 இன் கீழ் அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 50.59 | 31.46 | 30.59 | 37.05 | 130.00 | 93.86 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் 6000/0000/00/0015/0089/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 100.38 மில்லியனாக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

தொல்பொருளியல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்த பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களைக் கடந்த ரூபா 12,062,055 ஆன 17 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

20701 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்த ரூபா 1,237,806 கூட்டுத் தொகையான நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

### 3.3 நல்லாளுகையும் கணக்களித்தகைமையும்

#### 3.3.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2015 செப்தெம்பர் 14 ஆந் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டமை மற்றும் போதியளவு பயிற்சிபெற்ற பதவியணியினர் இல்லாமை காரணமாக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 3.3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2015 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் கூட்டத் தொடரொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தலைமை அலுவலகத்தினதும் கிழக்கு மாகாண அலுவலகத்தினதும் அவ்வறிக்கைகள் 2016 யூன் மாதம் வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. தலைமை அலுவலகத்தினதும் கிழக்குப் பிராந்திய அருங்காட்சியகத்தினதும் நூதனப் பொருட்கள் அம்மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரங்சாமடம அருங்காட்சியகம் திறந்து வைக்கப்படாமை

ரங்சாமடம பிராக் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அருங்காட்சியகத்திற்காக 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 5,500,000 மற்றும் ரூபா 728,800 செலவிடப்பட்டிருந்தது. காணியின் உரித்து காணப்படாமை, கட்டிடங்களின் பராமரிப்பு, நுழைவு வீதி மற்றும் பொது வசதிகள் காணப்படாமை போன்ற சிக்கல்கள் தீர்வு செய்யப்படாததன் பேரில் 2016 மே மாதமளவிலும் அருங்காட்சியகம் குறைப் பயன்பாட்டிற்குட்பட்டிருந்தது.

(ii) பொலன்னறுவை சுற்றுலா விடுதிக்காக கூரை தகரங்கள் பயன்பாடு

2014 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,141,950 பெறுமதியான 6, 8 மற்றும் 10 அடி அளவிலான 336 கூரைத் தகரங்கள் மற்றும் 96 கூரை முகட்டு தகரங்கள் 2016 மே மாதமளவிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 செயலாற்றல்

(அ) போதியளவு நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

திணைக்களத்தினால் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாமல் இருந்ததுடன், அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) தொல்பொருளியல் அதிகாரச் சட்டத்தினைத் திருத்தம் செய்தல்

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக திணைக்களத்தினால் கூடுதலான அதிகாரங்களை கையளிக்குமாறு 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்திற்கும் 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்பொருள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்திற்கும் வெவ்வேறாக திருத்தங்களை உட்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அவ் அதிகாரச்சட்டங்களுக்குரிய பரிந்துரைகள் 2014 பெப்ரவரி மாதத்தின் போது தேசிய மரபுரிமைகள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2014 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபன்தின் பிரகாரம் உரிய எதிர்வரும் நடவடிக்கைகள் தொடர்பாக திணைக்களத்தினால் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமையால் எதிர்பார்த்த நோக்கம் 2016 மே மாதம் அளவிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை

(ஆ) தொல்பொருட்களை பதிவேடுகளுக்கு உட்படுத்துதல்

2008 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தேசிய தொல்பொருளியல் கொள்கைக்குரிய 3 ஆவது நோக்கமாக ‘‘தொல்பொருள் இடங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் அசையாத தொல்பொருட்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தல்’’ என குறிப்பிடப்பட்டிருந்தன. இலங்கையின் தொல்பொருள் உரிமைகளின் கீழ் எடுக்கப்படும் அசையாத தொல்பொருட்களை பதிவேடுகளுக்கு உட்படுத்துதல் திணைக்களத்தில் செயற்படுத்தப்பட்டு வந்த போதிலும், ஏனைய அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், சமய ஸ்தாபனங்கள் மற்றும் தனிநபர் உரிமையில் காணப்படும்

அசையும் தொல்பொருள் அதிகளவில் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்தன.

**(இ) தீகவாபி தாது கோபத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

தீகவாபி தூபியைச் சுற்றி அமைந்துள்ள சுமார் 18 அடி உயரமான தூபி உறுதியற்று இருந்தமையால் 2015 மார்ச் மாதமளவில் அம்மதிலின் 95 சதவீதம் அளவில் கழற்றி அகற்றப்பட்டிருந்த போதும், பாதுகாப்பு நடவடிக்கைகள் அதனுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. தீகவாபி தூபி பாதுகாப்பிற்கான மதியுரைக் குழு 2015 பெப்ரவரி 19 ஆந் திகதி சைத்திய அமைந்துள்ள காணியில் மேற்கொண்ட அவதானிப்புக்களின் பின்னர் "தூபியின் வடிவம் உறுதிப்படுத்தும் வகையில் நிர்மாணிக்கப்பட்டு வெள்ளை சுண்ணாம்பு பூசப்பட்டு அணிகலன் அணிவிக்கப்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென" இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தனர். இதற்காக வாஸ்து சாஸ்திரப்படியான மற்றும் பொறியியலாளர் திட்டம் தயாரிக்கப்பட்டு 2015 யூன் மாதத்தின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த மொத்த செலவின மதிப்பீடு ரூபா 772 மில்லியனாக இருந்ததுடன், 5 ஆண்டுகளில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் வேலைகள் 2015 ஆகஸ்ட் 24 ஆந் திகதி ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது 377,000 செங்கற்கள் ரூபா 6,032,000 இற்கு வேலைத்தளத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த செங்கற்களின் உறுதியை (செங்கல்லொன்றின் உதைப்பு இயலளவு) பரீட்சிப்பதற்காக அச்செங்கற்களின் P.S.I. பெறுமதி தொடர்பான தெரிவுப் பரிசோதனை அறிக்கையொன்று கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக 2015 ஒக்தோபர் மாதத்தின் போது மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. பரீட்சிக்கப்பட்ட மாதிரியில் சகல கற்களும் கொள்வனவு விதந்துரைப்புக்களில் குறிப்பிடப்பட்ட P.S.I. 400 இற்கு குறைவாக இருந்தன. இக்கற்கள் வேலைத்தளத்திற்கு வழங்கும் சந்தர்ப்பத்தில் தரம் பரீட்சிக்கப்படாதிருந்ததுடன் செங்கள் சூலைகளில் பெற்றுக்கொண்ட மாதிரிகளின் பரிசோதனை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வழங்குனருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) தீகவாபி தூபி பாதுகாப்பிற்காக 2014 திசெம்பர் மாதத்தின் போதும் 2015 முதல் காலாண்டிற்காக வெளித்தரப்பினரிடமிருந்து சேவைகள் (உழைப்பு மற்றும் வாகனங்கள்) பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இதற்காக மதிப்பீடு அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் சேவைகள் வழங்கப்பட்டிருந்தன. நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,685,050 தொகையாக இருந்தமை கண்டறியப்பட்ட போதிலும், நிறைவேற்றப்பட்ட சேவைகளின் போதுமான தன்மை தொடர்பாக சிக்கல்கள் காணப்பட்டமையால் சிவில் பாதுகாப்பு படையணிக்கும் ஏனைய தரப்பினருக்கும் உரிய பட்டியல்கள் தீர்வு செய்ய முடியாதிருந்தது.

**(ஈ) தொல்பொருளியல் வெகுமதி நிதியம்**

சட்டவிரோதமாக பயன்படுத்தப்படுகின்ற தொல்பொருட்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கும், தொல்பொருளை பாதுகாப்பதற்கு அல்லது பங்களிப்பு வழங்கும் நபர்களுக்கு உத்தியோகத்தர்களுக்கும், தகவல் வழங்குவோருக்கும் செயற்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது செயற்திறனையும் வினைத்திறனையும் அதிகரிக்கும் நோக்கில் தொல்பொருளியல் வெகுமதி நிதியம்

உருவாக்கப்பட்டிருந்தது.தொல்பொருளியல் வெகுமதி நிதியத்திற்கு 2010 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 73,486,473 தொகை கிடைக்கப்பெற்றிருந்தது. நலன்கள் கிடைக்க வேண்டியவை தொடர்பான உள்ளக சிக்கலொன்று காரணமாக அப்பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் இம்முழுத்தொகையும் அரசின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்நிதியத்திலிருந்து உரித்து கிடைக்க வேண்டிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் நலன்கள் கிடைக்காமையின் பேரில் நிதியத்தை தாபித்ததன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(உ) நீலகிரிய தூபியை பாதுகாத்தல்**

நீலகிரி தூபியின் பாதுகாப்பிற்கு 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 8 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அரையாண்டில் ரூபா 4 மில்லியன் வீதம் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. முதல் அரையாண்டிற்காக செயற்திட்டத்திற்குரிய பாதுகாப்பு மதிப்பீடு அங்கீகரித்துக் கொள்ளப்படாமையால் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் மாதத்தின் போது சீமெந்து, மணல் உட்பட பொருட்கள் கொள்வனவு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் ரூபா 2.3 மில்லியன் வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் எஞ்சிய நிதிஏற்பாடான ரூபா 5.7 மில்லியனில் ரூபா 2.1 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஊ) யுதகணாவை தாது கோபுர பாதுகாப்பு**

2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 4 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், செங்கற்களை பெற்றுக்கொள்ள முடியாமையால் ரூபா 3.7 மில்லியன் அதாவது 93 சதவீதம் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**3.6 நட்டங்களும் இழப்புகளும்**

திணைக்களத்தின் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அநுராதபுரம் புதிய சுற்றுலா விடுதி நிமாணத்தின் முறைகேடுகள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கட்டிடக் கலை விஞ்ஞான மதியுரை சேவை (திட்டமிடல் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்) இற்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 443,000 தொகை வாஸ்து சாஸ்திர நிபுணருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இச்சுற்றுலா விடுதி நிர்மாணிப்பதற்குரிய எவ்வித சேவையொன்றும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) வடமத்திய மாகாண பிரதிப் பிரதம செயலாளரின் (பொறியியல் சேவை) பரிந்துரைக்கு முரணாக ரூபா 1,418,483 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(iii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.13.4 (பீ) வழிகாட்டலின் பிரகாரம் திணைக்களத் தலைவர் தயாரித்த கூற்றொன்றுடன் அனைத்து ஆவணங்களும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தொடர்புபடுத்தப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு மேலதிக வேலைகளுக்காக கொடுப்பனவு

செய்ய முடியுமான போதிலும், ஒப்பந்த பெறுமதியில் 25.3 சதவீதம் அல்லது ரூபா 4,222,928 மேலதிக வேலைகளுக்காக மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) பொலன்னறுவை சுற்றுலா விடுதியின் பழுதுபார்த்தலுக்காக பலகைகளை கொள்வனவு செய்தல்.**

2015 திசெம்பர் 26 ஆந் திகதி கூரைத் திருத்தங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 617,433 பெறுமதியான வெவ்வேறு அளவிலான மரங்களிடையே தரமற்ற மரங்களும் இருந்தன. தரமற்ற மரங்கள் தொடர்பாக 2016 மே மாதம் அளவிலும் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) மோட்டார் சைக்கிள் பாவனை**

திணைக்களத்திற்குச் சொந்தமாக 57 மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகங்கள் காணப்பட்டதுடன், அதில் 13 ஐ பயன்படுத்தும் உத்தியோகத்தர்களோ அல்லது பிரதேச அலுவலகங்கள் தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை. பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட 10 மோட்டார் சைக்கிள்கள் 2015 ஒக்தோபர் மாதம் முதல் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2016 யூன் மாதமளவிலும் தலைமை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

## 3.7 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) அனுராதபுரம் சுற்றுலா விடுதியின் பயன்பாடு**

அனுராதபுரம் புதிய சுற்றுலா விடுதி நிர்மாணத்திற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 15.8 மில்லியனும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 4.3 மில்லியனும் செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. சுற்றுலா விடுதிக்கு தேவையான வீட்டுத் தளபாட உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 2016 மே மாதம் அளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் கட்டிட நிர்மாணத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அத்தனகல்ல, பல்கும்புற, முருத்தவெள வத்த காணியைக் கையேற்றல்**

அத்தனகல்ல பிரதேச செயலக பிரிவிற்குரிய முருதவெள வத்த 09 ஏக்கர் 22 பேர்ச் அளவிலான காணியைக் கொண்டதாகும். இக்காணி பழைய அதிகார கோட்டையொன்றோ அல்லது நகரமொன்றின் இலட்சணங்களைக் காணக்கூடியதாக இருந்தமை 2000 ஆம் ஆண்டின் போது கண்டறியப்பட்டிருந்தது. தொல்பொருளியல் வனாந்திரமொன்றாக அறிவிப்பதற்காக இக்காணியை கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், பின்தொடர் நடவடிக்கை பலவீனமாக இருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமையின் பேரில் காணி விளைச்சல் வருமானம் 2013 ஆம் ஆண்டிலிருந்து அரசிற்கு கிடைக்காமல் போதல் மற்றும் காணியில் அனுமதியற்ற வீதிகள் தோன்றுதல் போன்ற சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.

## 4.15 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 53 | 09 | 44 |
| மூன்றாம் நிலை | 56 | 38 | 18 |
| இரண்டாம் நிலை | 737 | 461 | 276 |
| ஆரம்ப நிலை | 1,610 | 1,205 | 405 |
| மொத்தம் | 2,456 | 1,713 | 743 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் பிரிவுத் தலைவர் பதவிகளுக்குரிய பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் போன்ற 53 சிரேஷ்ட நிலை பதவிகளில் 44 பதவிகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடங்களாக காணப்பட்டன. இப்பதவிகளுக்காக 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பதில் கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன், இந்நிலைமை திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றல் வீழ்ச்சியடைவதற்கு காரணங்களாக இருந்தன.

(ஆ) திணைக்களத்திற்காக 44 பாதுகாப்பு உதவியாளர்கள் (வாஸ்து சாஸ்திரம் / தொழில்நுட்ப உத்தியோகத்தர்) பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அப்பதவிகளில் 32 வெற்றிடங்களாக காணப்பட்டமையால் பாதுகாப்பு செயற்திட்டங்களுக்குரிய மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளில் பலவீனமான மட்டமொன்றில் காணப்பட்டன.